அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் : 01/2017

எனது இலக்கம் :EST-3/LANGUE/05/0179
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2017.03.08

அமைச்சுக்களின் செயலாளர்கள்
பிரதம மாகாண செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**ஓர் அரச கரும மொழியினை விடக் கூடுதலான மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளும் அலுவலர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவினை செலுத்துதல்**

மொழித் தேர்ச்சி ஊக்குவிப்புக் கொடுப்பனவினை செலுத்துவதற்காக வெளியிடப்பட்ட 1998.12.30 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 29/98, 2004.06.23 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 29/98(I), அரச கரும மொழிக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவினை செலுத்துதல் தொடர்பான புதிய ஏற்பாடுகளை உள்ளடக்கி பிரசுரிக்கப்பட்ட 2007.02.09 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2007 மற்றும் அரசமொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட 2007.05.28 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 07/2007 மற்றும் அச்சுற்றறிக்கைக்குப் பதிலாக பிரிசுரிக்கப்பட்ட 2014.01.21 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இன் பால் தாங்களின் அவதானத்திற்கு கொண்டு வருகின்றேன்.

02. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 07/2007 இன் 5 ஆம் பிரிவின் மூலம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2007 இன் ஏற்பாடுகள் 2007.07.01 ஆந் திகதியின் பின்னர் அரச சேவையினுள் உள்வாங்கப்படும் அலுவலர்களுக்கு உரித்தற்றது எனக் குறிப்பிடப்பட்டிருப்பினும் ஒருங்கிணைப்பு மொழியான ஆங்கில மொழிக்கான மொழி ஊக்குவிப்பு கொடுப்பனவினை செலுத்தும் போது அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 29/98 மற்றும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 29/98(I) இன் ஏற்பாடுகள் 2007.07.01 ஆந் திகதி முதல் இணைத்துக்கொள்ளப்பட்ட மற்றும் எதிர்வரும் காலங்களில் இணைத்துக்கொள்ளப்படவுள்ள அலுவலர்களுக்கு உரித்தாக்கிக் கொள்ள முடியும்.

ஒப்பம்/ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு